# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 40 /2022** **நாள்: 11.02.2022**

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022

**இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ள மாதிரி நடத்தை விதிகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் தொடர்பாக வேட்பாளரின் தற்காலிக தேர்தல் அலுவலகம் அமைத்தல்**

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகள் (தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர் முதல்நிலை பேரூராட்சி தவிர) என 648 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

அரசியல் கட்சிகளிடமிருந்து வேட்பாளரின் தற்காலிக தேர்தல் அலுவலகம் அமைத்தல் தொடர்பாக கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, இந்திய தேர்தல் ஆணையத்தால் சட்டமன்ற தேர்தலின்போது கூறப்பட்டுள்ள விதிகளை பின்பற்றி அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களால், தற்காலிக தேர்தல் அலுவலகம் அமைக்க அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உரிய அனுமதி பெற வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், Covid-19 நடைமுறைகளை பின்பற்றிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

11/2/2022
மக்கள் தொடர்பு அலுவலர்